


இராமநாதபுரம் மாவட்டம் அச்சங்குளம் ஊராட்சி அச்சங்குளம் கிராமத்தில் இயங்கி வரும் தனியார் ஆரோ பிளான்ட்டின் மின்சார கசிவால் பாதிக்கப்பட்டு இறந்த குழந்தையின் தாய், தந்தை ஆகியோரிடம் இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் எம். எல்.ஏ. சந்தித்து ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் கே.கதிரவன் எம்.எல்.ஏ. மற்றும் கமுதி வடக்கு ஒன்றியச் செயலாளர் வி.வாசுதேவன் உள்ளனர்.

அரசு அனுமதியின்றி மணல் அள்ளியதை தடுத்த

தலையாரியை தாக்கி விட்டு தப்பிச் சென்ற மணல் மாஃபியாக்கள்!

சிவகங்கை, அக். 11- சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே சூரக்குடி ஊராட்சிக்கு உட்பட்ட உள்ள சிலநீர்பட்டி, ஒத்தப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அடிக்கடி மணல் கடத்தப்படுவதாக கிராம மக்கள் சிங்கம்புணரி வருவாய்த்துறையினருக்கும், காவல்துறையினருக்கும் தகவல் தெரிவித்து வந்தனர். ஆனால் இதுவரை இரண்டு துறைகளும் கண்டும் காணாமல் இருந்து வந்ததாக குற்றம் சாட்டிய கிராம மக்கள், இன்றும் சிலநீர்பட்டி கிராமத்தில் தனியார் பட்டா நிலத்தில் அரசு அனுமதி இன்றி மணல் அள்ளுவதை அறிந்த கிராமத்து இளைஞர்கள், கிராம உதவியாளரான தலையாரி சுரேஷ்க்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு தலையாரி சென்ற போது மண் அள்ளும் இயந்திரமான ஹிட்டாச்சி வாகனம் மூலம் லாரியில் மண் அள்ளி கொண்டு இருந்துள்ளனர். அப்போது சட்டவிரோதமாக மணல் அள்ளுவதை தலையாரி, தடுத்து நிறுத்த முயன்றுள்ளதாகவும், அப்போது மண் அள்ளிய மர்ம நபர்கள் தலையாரியை தகாத வார்த்தைகளால் பேசி தாக்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தகவல் அறிந்து அப்பகுதி கிராம மக்கள் சம்பவ இடத்திற்கு சென்ற பொழுது ஹிட்டாச்சி வாகனத்தை மட்டும் விட்டுவிட்டு அங்கிருந்து மற்ற வாகனங்களை எடுத்துக் கொண்டு மர்ம நபர்கள் தப்பி ஓடி உள்ளனர். பின்பு ஹிட்டாச்சி வாகனத்தை சிறை பிடித்து கிராம இளைஞர்கள், கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் எஸ்வி மங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அவரது புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சட்டவிரோதமாக மணல் கடத்திச் சென்ற வாகனங்களை தடுத்து நிறுத்த முயலும் தலையாரி அல்லது கிராம உதவியாளர்கள், போலீசார் ஆகியோர் மணல் மாஃபியாக்கள், சமூக விரோதிகளால் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதுபோன்ற தாக்குதல்களில் ஈடுபடுபவர்கள் மீது கொலை முயற்சி மற்றும் அரசு ஊழியரை பணி செய்யவிடாமல் தடுத்தல் ஆகிய கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

சேலம் மத்திய மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் இரா. இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், அக்.11- சேலம் மத்திய மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்15.10.2026ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மாவட்டக் கழக அலுவலகமான"கலைஞர் மாளிகை"யில்,தலைமைக் கழக பிரதிநிதி, மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் கிரிராஜன் தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதி தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச்செயலாளர் அழகிரி சதாசிவம்மற்றும்மத்தியமாவட்டக்கழகஅவைத்தலைவர் ஜி.கே.சுபாசு ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச்செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பகுதிகழக செயலாளர்கள், பேரூர்கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.



இவ்வாறு சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

காளையார் கோவில் காவல் ஆய்வாளரை அரிவாளால் வெட்டியவர் கைது!

பொதுமக்கள் சிறை பிடிப்பு!

சிவகங்கை, அக்.11 - சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் உள்ள வேன் உரிமையாளர் ராஜவேலு. இவர் நேற்று முன்தினம் மாலையில் குடி போதையில் காளையார் கோவில் பேருந்து நிலையம் அருகே வரும் பொதுமக்களை வழிமறித்து ரகளை செய்து கொண்டிருந்தார்.

இதுபற்றி தகவல் அறிந்த தும் காளையார் கோவில் ஆய்வாளர் காதர் மீரான் பேருந்து நிலையத்திற்கு சென்றுள்ளார். பொதுமக்களுக்கு இடையூறு செய்து கொண்டிருந்த ராஜவேலுவை மடக்கி பிடிக்க முயற்சி செய்து உள்ளார். ஆனால் ராஜவேலு திடீரென்று தன்னிடம் இருந்த அரிவாளால் ஆய்வாளர் காதர் மீரானை காயப்படுத்தி விட்டுதப்பி ஓடி உள்ளார்.

இதைப் பார்த்த பொது மக்கள் ராஜவேலுவை சுற்றி வளைத்துர் பிடித்து போலி சாரிடம் ஒப்படைத்தனர். ராஜவேலு தாக்கியதில் காயம் அடைந்த இன்ஸ் பெக்டர் காதர் மீரான் சிவ கங்கை அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டார்.

இதுகுறித்து காளையார் கோவில் போலிசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இச் சம்பவம் காளையார் கோவில் பகுதியில் பர பரப்பை ஏற்படுத்தி யுள்ளது.

சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்

லயன் வீ. தியாகராஜனின் தந்தை ஏ.என். வீராசாமி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை. அக். 11 - சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணி அமைப்பாளர் லயன் வீ. தியாகராஜன், வீ. ஜெயபால், 3வது வட்ட பிரதிநிதி வீ. தனபால், வீ. தனசேகர், வீ. தேவி தனலட்சுமி ஆகியோரின் தந்தையாரும், என். பிரபு அவர்களின் மாமனாருமான திருவொற்றியூர் மேற்கு பகுதி, எண்ணூர் அன்னை சிவகாமி நகர் 3வது வட்டத்தைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி ஏ.என். வீராசாமி (வயது 80) அவர்கள், உடல்நலக் குறைவு காரணமாக 09.10.2026 அன்று காலை 10 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்



தகவல் அறிந்ததும் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள் தாசன் கழகத் தோழர்களுடன் சென்று மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

உடன் மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் ஜி. சந்திராபோஸ், பகுதி பொருளாளர் எம். வஜ்ரவேல், மாவட்ட பிரதிநிதி எம். சந்திரகுமார், பொன். கோ. விஜயன், மாவட்ட மீனவர் அணி தலைவர் ஆர்.நவகுமார், மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் வை.ம.கண்ணதாசன், பகுதி பிரதிநிதிகள் வை. சின்னையன், எம். கார்த்திக், எஸ். ராஜேஷ், ஆர். நரேன்குமார், எஸ். ஜோயல், மற்றும் கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று (10.10.2026 சனிக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் அன்னை சிவகாமி நகர் 2-வது தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு எர்ணாவூர் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த வருத்தங்களுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

காட்பாடி அருகே

16 வயது சிறுமியை மிரட்டி பாலியல் வன்கொடுமை!

த.வெ.க. ஆட்சியில் தொடரும் அச்சுறுத்தல்!

வேலூர்,அக்.11- வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே 16 வயது சிறுமியை மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட நிகழ்வு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தவெக ஆட்சியில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்துள்ளது பொதுமக்களை அச்சத்திற்குள்ளாக்கி உள்ளது.

வேலூர் மாவட்டம் ஏரந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்தவர் ஹரி என்ற 45 வயது நபர், வெல்டிங் தொழில் செய்து வருகிறார். இவர், அதே பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமிக்கு உறவினர் ஆவார். இந்நிலையில், அந்த சிறுமி, இவரது வீட்டிற்கு வந்தபோது, மிரட்டி பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இதில் பாதிக்கப்பட்ட சிறுமி கர்ப்பமடைந்த விவகாரம் அப்பகுதி மக்களுக்கு தெரியவந்தது. உடனடியாக பொதுமக்கள் மற்றும் உறவினர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நல உதவி எண்ணான 1098-க்கு தகவல் தெரிவித்தனர். தகவலின் பேரில் சம்பந்தப்பட்ட இடத்திற்கு நேரில் சென்று விசாரணை நடத்திய குழந்தைகள் நலத்துறை அலுவலர்கள் மேல் நடவடிக்கைக்காக காட்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த காட்பாடி அனைத்து மகளிர் போலீசார், ஹரி மீது 6 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நாமக்கல் பி.குப்புசாமி

அக்டோபர் 11 (2002)



இளமைப்பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

நகரக் கழகப் பொருளாளராக பொறுப்பு வகித்தவர்.

கூட்டுறவு வீட்டுவசதி சங்க இயக்குனராகவும், நாமக்கல் நகர்மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து மக்கள் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(08.10.2026)



1. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே கடன் பாக்கியை திருப்பி கேட்டதால் பர்னிச்சர் கடை உரிமையாளர் அடித்துக்கொலை...

2. சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் அருகே சேலையனூர் கிராமத்தில் மது போதையில் தகராறு வடமாநில வாலிபர் அடித்துக் கொலை. போக்குவரத்து காவலர் உள்ளிட்ட இருவர் சிக்கினர் ...

3. கோயம்பேடு மார்க்கெட்டில் தலை நசுங்கிய நிலையில் ஆண் பிணம், கொலையா..? என போலீஸ் விசாரணை ...

4. சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில் அருகே ஆட்டோ ஸ்டாண்டில் அரிவாளை காட்டி மிரட்டி கொண்டிருந்த ரவுடியை பிடிக்க சென்ற போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு அரிவாள் வெட்டு....



5. சென்னை மாதவரம் அருகே மஞ்சம்பாக்கத்தில் வேலைக்கு சென்று திரும்பிய உணவு டெலிவரி நிறுவன ஊழியரை வழிமறித்து சரமாரியாக அரிவாள் வெட்டு, மூன்று பேர் கொண்ட கும்பல் வெறிச்செயல் ....

6. சென்னை வில்லிவாக்கத்தில் இருந்து பிராட்வே செல்லும் மாநகர பேருந்தில் நகைக்கடை ஊழியிடமிருந்து ஒரு கோடி மதிப்புள்ள தங்கம் திருட்டு 7. திருவண்ணாமலையில் பரபரப்பு. நூதன முறையில் மயக்க மருந்து கொடுத்து நாய்களைப் கொன்று, வீடுகளில் கொள்ளை முயற்சி.....

8. சிவகாசி அருகே 13 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் சிக்கினார் ...

9. சென்னை கண்ணகி நகரில் வேலை வாங்கித் தருவதாக கூறி இளம் பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட வாலிபர் சிக்கினார் ..

10. சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் இரவு 11 மணிக்கு மேல் சுற்றி திரியும் கஞ்சா போதை வாலிபர்கள் பயணிகளிடம் செயின் பறிக்கும் சம்பவம் தொடர்கதை ...

11. திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டில் அரசு நிதி உதவி பெறும் மாணவர் விடுதியில் பத்தாம் வகுப்பு மாணவனுக்கு பாலியல் தொல்லை கொடுத்த விடுதி வார்டன் சிக்கினார் ...



12. திருச்சி மாவட்டம் திறுவெரும்பூர் இளம் பெண் பரபரப்பு புகார். தனியார் நிறுவன அதிகாரி செல்போனில் 62 பெண்களின் ஆபாச வீடியோக்கள் சிக்கியதால் பரபரப்பு...

13. குமரி மாவட்டம் ஆசாரி பள்ளம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த கைதி தப்பி ஓட்டம் ....

14. சென்னை அரும்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உணவு டெலிவரி நிறுவன ஊழியரை வழிமறித்து சரமாரியாக தாக்கி செல்போன் மற்றும் பணம் பறிப்பு ...

15. சென்னை கொடுங்கையூரில் மேற்கு வங்கத்தைச் சேர்ந்த கூலிக் தொழிலாளர்களை வழிமறித்து கத்தியை காட்டி பணம் பறிப்பு ...

16. சென்னை வியாசர்பாடியில் தண்ணீர் கேன் கடை , பால் கடை ஆகியவற்றின் பூட்டை உடைத்து பணம் கொள்ளை ...

17. சென்னை தண்டையார்பேட்டை ஜஓசி பேருந்து நிறுத்தம் அருகே வேலை முடித்து விட்டு நடந்து சென்ற வாலிபரை வழிமறித்து கத்தி முனையில் செல்போன் பறிப்பு....

18. மதுரை சுப்பிரமணியபுரம் பகுதியில் கள்ள நோட்டு தாராள புழக்கம் , நான்கு பேர் சிக்கினர் ..

19. சென்னை புழல் அடுத்த எம்.ஜி.ஆர். நகரில் ஆய்வு பணி மேற்கொண்ட அமைச்சர் லோகேஷை சாலைகளை சீரமைத்து தரக்கோரி பொதுமக்கள் முற்றுகையிட்டனர் , ...

20. ஸ்ரீவைகுண்டம் த.வெ.க. எம்.எல்.ஏ. சரவணன் மீது பண மோசடி புகார். ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் பொறுப்பு வாங்கித் தருவதாக பணம் பெற்றதாக புகார் ....

21. மாதவரம், மணலி பகுதிகளில் போதை மாத்திரை விற்பனை தாராளம், பொதுமக்கள் அச்சம் ...



22. கன்னியாகுமரி அருகே காவல் உதவி ஆய்வாளர் மீது அரிவாள் வீசி ரவுடி தாக்க முயன்றதால் பரபரப்பு. விஜய் ஆட்சியில் காவலர்களுக்கே பாதுகாப்பில்லாத சூழல் இருப்பதாக பொதுமக்கள் அச்சம்.

23. திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே மானூர் ஊராட்சி ஒன்றிய அரசு தொடக்கப் பள்ளியில் உள்ள குடிநீர் தொட்டியில் மலம் கலக்கப்பட்டதால் பொதுமக்கள் அதிர்ச்சி.

24. திருத்தணி அருகே பள்ளி மாணவியை காதலிக்க வற்புறுத்தி கொலை மிரட்டல் விடுத்த இளைஞர் போக்சோ சட்டத்தில் கைது.

25. விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் பூ வியாபாரி சங்கரலிங்கம் என்பவரது வீட்டில் 6 சவரன் நகை, ரூ.50,000 திருடிய பெண் காவலர் பாக்கியலட்சுமி பணியிடைநீக்கம். த.வெ.க. ஆட்சியில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ள நிலையில், பெண் காவலரே, திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டதால் அதிர்ச்சி.

26. தேனி: போடிநாயக்கனூரில் 300 ஆண்டுகள் பழமையான சாலை காளியம்மன் கோயிலில் அதிகாலையில் கொள்ளை.

கோயிலின் பூட்டை உடைத்து உண்டியலில் இருந்த பணம், கோயில் பீரோவில் இருந்த அம்மன் நகைகள் கொள்ளை.

27. களம்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதிய மருந்து இல்லாததால் எலி கடித்த சிறுவனுக்கு வெளியில் இருந்து மருந்து வாங்கி சிகிச்சை.

சிறுவனின் தந்தையே தனியார் மருந்தகத்தில் இருந்து மருந்து வாங்கி வந்த நிகழ்வு சமூக வலைதளத்தில் வைரல்.

28. சென்னை ஆர்.கே.நகர் அரசு கலைக்கல்லூரி வளாகத்திற்குள் பட்டப்பகலில் பகிரங்கமாக கஞ்சா புகைக்கும் இளைஞர்கள்! கஞ்சா பயன்படுத்தும்போது வீடியோ எடுப்பதை கண்டதும், அலறியடித்துக் கொண்டு தலைதெறிக்க ஓடும் கும்பலின் அதிர்ச்சிக் காட்சிகள்!